24th February 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த மில் ஏற்கனவே மூன்று ஆண்டுகளுக்கு மேல நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. மீண்டும் தொழிலாளர்கள் தகராறு காரணமாக நஷ்டமேற்பட்டு அந்த மில் மூடப்பட்டுவிடுமோ என்ற பயம் ஏற்படுகிறது. அது இல்லாத வரையில் புதிதாக வந்துள்ள தொழிலாளர் அமைச்சர் புது கண்ணேட்டத்தோடு அதை அணுகி தீர்த்து வைப்பாரா ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : இப்போது அங்கே ஏற்பட்டிருக்கும் சுமுகமான நிலையை அருள்கூர்ந்து நண்பர் கெடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. தங்கபாண்டியன் : இப்போது நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குப் பிறகு புதிய நிர்வாகம் ஏற்பட்டிருக்கிறது. புதிய நிர்வாகத்தில் அந்த மில் லாபகரமாக ஓடிக்கொண்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : தகவலுக்கு நன்றி.

MR. CHAIRMAN : Question 34 is postponed.

Jewellery and diamonds of Tiruchendur Temple.

* 35 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the jewellery and diamonds of Tiruchendur temple were stolen; and

(*b*) if so, the value thereof?

திருச்செந்தூர் கோவில் நகைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சமயக் கட்டளை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூர் கோவில் நகைகள், வைரங்கள் திருடு போனதா ?

(இ) ஆமெனில், அவற்றின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். திருச்செந்தூர் ஸ்ரீ சுப்ரமணியசுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திரு ஆபரணங்களில் சில காணமற் போயின.

(இ) ரூ. 99,075-72.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த திருட்டுப்போன நகைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா ? எப்படி திருட்டு போனது என்பது பற்றிய விவரங்கள் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : திருட்டுப்போனவை பற்றி இப்போது போலீஸ் இன்வெஸ்டிகேஷன் இருக்கிறது. சில பொருள்கள் கைப்பற்றப்பட்டன. பாக்கி நகைகள் பற்றி இன்வெஸ்டிகேஷன் நடந்துவருகிறது. முடியவில்லை.

[24th February 1969

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தங்க நகைகளுக்குப் பதிலாக பித்தளை நகைகளையும், நல்ல அசல் வைரங்களை எடுத்துவிட்டுப் பதிலாக போலிக் கற்களையும் வைத்து அசல் நகைகளை கொண்டுபோய்விடுவதாக சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதுபற்றிய தகவல் இல்லை, தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. எம். எத்திராஜுலு : அடிக்கடி கோவில்களில் சுவாமி விக்ரகங்களும், நகைகளும் திருட்டுப்போவதாகப் பத்திரிகையில் பார்க்கிறோம். இதைப்போல வேறு கோவில்களில் உள்ள விலையுயர்ந்த பொருள்கள், ஆபரணங்கள், திருட்டுப்போகாமல் இருக்க அரசாங்கம் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இதுவரைக்கும் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இனிமேல் உறுப்பினர்கள் யோசனையின் பேரில் பரிசீலனை செய்யப்படும்.

Fly ash excreted by Thermal Stations

* 36 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the use of the fly ash excerted from the thermal power stations in Tamil Nadu;

(*b*) the places where the ash is dumped; and

(*c*) the places where the fly ash will be dumped if 2,500 tonnes of fly ash is excreted from the proposed thermal power station at Ennore?

அனல் மின் நிலையங்களின் கழிவு சாம்பல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அனல் மின்சார நிலையங்களில் கழிவு பொருளான சாம்பலை என்ன உபயோகம் செய்கிறார்கள் ?

(இ) அவை எங்கெங்கு கொட்டப்படுகிறது ?

(உ) எண்ணூரில் அமையப்பட இருக்கும் அனல் மின் நிலையத்தின் சாம்பல் நாளொன்றுக்கு 2,500 டன் கழிவு பொருளை வெளியேற்றினால் அவை எங்கு கொட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) பேசின் பிரிட்ஜ் மின்சார நிலையத்திலிருந்தும் சமயநல்லூர் மின்சார நிலையத்தி லிருந்தும் கிடைக்கும் சாம்பலை, அண்மையிலுள்ள நீர் தேங்கி நிற்கும் தாழ்ந்த பகுதிகளின் நில மட்டத்தை உயர்த்துவதற்கும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கும் மின்சார